செய்தி வெளியீடு எண் 62 நாள் 31.01.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கான வருமான வரி 2016-2017 ஆம் நிதி ஆண்டு வருமான வரி தாக்கல் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கான வருமான வரி 2016-2017 ஆம் நிதி ஆண்டு வருமான வரி தாக்கல் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கருவூலக் கணக்குத்துறை, மண்டல இணை இயக்குநர் (சென்னை மண்டலம்) திரு.செ.திருஞானசம்பந்தம் அவர்கள் மற்றும் கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், திருவள்ளூர் திருமதி. எஸ். நிர்மலா அவர்களின் முன்னிலையில் 30.01.2017 அன்று நடைபெற்றது.

கூட்டத்தில் உதவி ஆணையர், வருமான வரித்துறை திருமதி. T. மைதிலி அவர்கள் மற்றும் வருமான வரித்துறை அலுவலர்கள் மாதாந்திர வருமான வரி தாக்கல் 24G மற்றும் காலாண்டு வருமான வரி தாக்கல் 24Q பற்றிய விளக்கம் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் திருமதி. E. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :-

அனைத்து பணம் பெறும் அலுவலர்கள் தங்கள் அலுவலகத்தில் உள்ள அனைத்து பணியாளர்களின் வருமான வரியை காலம் தாழ்த்தாது 24Q (காலாண்டு வருமான வரி) தாக்கல் செய்ய வேண்டும் என்றும் வருடாந்திர சான்று Form 16 வரி செலுத்துபவர்களுக்கு பெற்று தர வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கருவூலக் கணக்குத்துறை, மண்டல இணை இயக்குநர் (சென்னை மண்டலம்) திரு.செ.திருஞானசம்பந்தம் அவர்கள் மற்றும் கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், திருவள்ளூர் திருமதி.எஸ்.நிர்மலா அவர்கள் அனைத்து உதவி கருவூல அலுவலர்கள் அவரது கட்டுப்பாட்டில் வரும் தானே பணம் பெறும் அலுவலர்கள், மற்றும் ஓய்வூதியதாரர்களின் காலாண்டு வரி தாக்கல் 24Q முறையாக தாக்கல் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~